**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

**பெறுநர்,**

தேதி : 13.02.2026

ஆசிரியர்,

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "பாரம்பரிய சிறுதானிய ரகங்களின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல்" பற்றிய பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் மேலாண்மை இயக்ககம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர், 12.02.2026 அன்று "பாரம்பரிய சிறுதானிய வகைகளின் மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல்" என்ற தலைப்பில் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி, "வளர்ந்து வரும் நாடுகளில் எதிர்பார்க்கப்படும் காலநிலை மாற்றச் சூழ்நிலைகளின் கீழ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த காலநிலை மாற்றத்திற்குத் தாங்கும் திறன் கொண்ட பயிர்களைப் பயன்படுத்துதல்" என்ற திட்டத்தின் கீழ், கிராண்ட் சேலன்ஜ்ஸ் கனடா நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது. உதவி பேராசிரியர் முனைவர் எஸ். கோகிலவாணி, (வேளாண் வானிலையியல்) அவர்கள் வரவேற்புரை வழங்கி, திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பாரம்பரிய சிறுதானியங்களின் அவசியத்தை விளக்கினார்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், ஊட்டச்சத்து மிக்க பாரம்பரிய சிறுதானியங்களைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளின் பொதியிடல் முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வாழ்க்கைமுறை நோய்களுக்கு எதிரான பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகும். பயிற்சியை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் என். வெங்கடேச பழனிச்சாமி அவர்கள் தலைமை வகித்து தொடங்கி வைத் த்தார். அவர் பாரம்பரிய சிறுதானிய வகைகளின் முக்கியத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் குறித்து விளக்கினார்.

அறுவடைப்பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். கார்த்திகேயன் அவர்கள், உணவுப் பொருட்களின் நீடித்த காலம் (Shelf life) மற்றும் மதிப்பூட்டப்பட்ட தயாரிப்புகளில் நுகர்வோர் விருப்பத்தை கருத்தில் கொள்ளும் அவசியம் குறித்து விளக்கமளித்தார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என்.கே. சத்தியமூர்த்தி அவர்கள், காலநிலை மாற்றம் மற்றும் அதன் வேளாண் உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து சிறப்புரை வழங்கினார். ராமசாமி சின்னம்மாள் அறக்கட்டளை செயலாளர் முனைவர் சரஸ்வதி ஈஸ்வரன் அவர்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டில் அரசு அல்லாத அமைப்புகளின் பங்கு மற்றும் வணிக முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் குறித்து கருத்துகளை பகிர்ந்துகொண்டார். உணவு செயல்முறை பொறியியல் துறையின் பேராசிரியர் முனைவர் வி. திருப்பதி அவர்கள், பாதுகாப்பு பொதியிடல் முறைகள் தயாரிப்புகளின் தரம், பாதுகாப்பு மற்றும் விற்பனை ஈர்ப்பை மேம்படுத்தும் விதம் குறித்து விளக்கமளித்தார். இந்த நிகழ்ச்சியில் மாநிலம் முழுவதும் இருந்து தொடக்க நிறுவனங்கள் (Start–ups) மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**